1996 ஆகஸ்ட் 22]

222—

மருதுபாண்டியர்களுக்கு நினைவுச் சின்னம்

***1980—திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருதுபாண்டியர்களுக்கு நினைவுச் சின்னங்கள் எழுப்பும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிகுந்த ஏமாற்றமான பதில் கிடைத்து இருக்கிறது. 1989-ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபோது இந்த மாமன்றத்தில் அண்ணன் தென்னரசு அவர்கள் அந்த கோரிக்கையை வைத்து, அந்த கோரிக்கை நம்முடைய அரசால் அன்றைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு, நடைமுறைப்படுத்தப் படுகிறபோது, நம்முடைய ஆட்சி கலைக்கப்பட்டது.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் : அதற்குப் பிறகு நினைவுச் சின்னம் ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள். பெரிய மருது, சின்ன மருது ஆகிய இரண்டு பேருடைய சிலையும் ஒரு கண்ணாடிக் கூண்டுக்குள் சிறிய இடத்தில் திருப்பத்தூரில் வைக்கப்பட்டு, அது நினைவுச்சின்னம் என்று சொல்லப்படுகிறது. அதற்கு விளக்கு இல்லை. அதை பராமரிக்க ஆள் இல்லை. பேரூராட்சியும் பராமரிக்கவில்லை, அரசாங்கமும் பராமரிக்க வில்லை. பொதுப்பணித் துறையும் பராமரிக்கவில்லை. செய்தித்துறையும்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பராமரிக்கவில்லை. அதற்கு ஏதாவது பராமரிப்புக்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பது ஒன்று. இன்னொன்று, அது 'ஸ்வீடிஷ் மிஷன்' ஆஸ்பத்திரி கட்டிட வளாகத்திற்குள் அமைந்திருக்கிறது. மருதுபாண்டியர்கள் இருவரது உடலும் அங்கே புதைக்கப்பட்டது. தலை இரண்டும் காளையார் கோயிலில் புதைக்கப்பட்டது. ஆகவே இரண்டு இடங்களிலும் நினைவுச் சின்னம் வேண்டும் என்றுதான் ஏற்கெனவே இருந்த நம்முடைய அரசு முடிவெடுத்திருக்கிறது. அப்போதும் இப்போதும் பொதுப்பணித்துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் இரண்டு இடங்களையும் பார்த்தார்கள். அதன் பின்னர் அதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன. இப்போது அந்தக் கூண்டுக்குள்ளே இருப்பதைக்கூட யாரும் பராமரிக்கவில்லை. அது தவிர, அந்த 'ஸ்வீடிஷ் மிஷன்' ஆஸ்பத்திரியில் அந்த வார்டு உள்ள இடத்தை அரசாங்கமே கையகப்படுத்தி, அங்கே நினைவுச் சின்னம் எழுப்பவேண்டும் என்பதுதான் நம்முடைய ஆட்சியின் விருப்பம். இல்லையென்றால், அவர்கள் தூக்குப் போடப்பட்ட இடம் பஸ் நிலையத்திற்கு எதிரில் இருக்கிறது. அந்த இடத்திலே இருக்கின்ற கட்டிடத்தைக் கையகப்படுத்தி அங்கே நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டுமென்ற முயற்சியும் நம்முடைய ஆட்சியில் இருந்தது. ஆகவே இப்போது பரிசீலனையில் இல்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே இது மீண்டும் பரிசீலிக்கப்படுமா? காளையார்கோயிலிலும், திருப்பத்தூரிலேயும் இந்த நினைவுச் சின்னங்கள் அமைக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மருதுபாண்டியர்களுக்கு என்று காளையார்கோயிலிலே அவர்களுடைய திருவுருவச் சிலைகள் நினைவுச் சின்னங்களாக இருக்கின்றன. இந்த ஆட்சியிலோ மற்ற ஆட்சியிலோ அவை அமைக்கப்பட்டது அல்ல. அந்தக் காலத்திலிருந்தே காளையார்கோயிலில் அந்த இரண்டு மாவீரர்களுடைய சிலைகளும் ஒளிவிட்டுக்கொண்டிருக் கின்றன சிலைகளாக. ஏற்கெனவே இந்த அரசு ஆட்சிப் பொறுப்பிலே அப்போது இருந்தபோது, மாண்புமிகு உறுப்பினர் கிருட்டிணன் அவர்கள் குறிப்பிடுவது போல வாக்குறுதி வழங்கியது உண்மைதான். அதன்படி, மருதுபாண்டியர்களுக்கு நினைவுச் சின்னம் வைக்க முயற்சிகள் மேற்கொண்டபோது, அரசு கலைக்கப்பட்டுவிட்டது என்பதும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். இப்போது கேட்கப்பட்ட கேள்விக்கும் மாண்புமிகு அமைச்சர் முல்லைவேந்தன் அவர்கள் பரிசீலனையில் இல்லை என்று சொன்னாலும் கூட, நான் மாண்புமிகு உறுப்பினர் கிருட்டிணன் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கின்றேன். இந்த

1996 ஆகஸ்ட் 22]

அரசு தொடங்கி ஏறத்தாழ மூன்று மாத காலங்கள் முடிந்துவிட்டன. இப்படி ஒரு கேள்வி கேட்டுத்தான் இந்தப் பிரச்சினையை எழுப்பவேண்டும் என்று இல்லாமல், என்னையோ முல்லைவேந்தனையோ சந்தித்து அவருடைய அரிய யோசனைகளை இந்த மூன்று மாத காலத்திற்குள் சொல்லியிருப்பாரேயானால், அதனுடைய அடிக்கல் நாட்டு விழா கூட இந்நேரம் நடைபெற்றிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 223, திரு. வெ. அ. ஆண்டமுத்து, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

223—

பவானிசாகர் அணைக்கட்டு பகுதியை சுற்றுலா மையமாக்குதல்

***1826—திரு. வெ.அ. ஆண்டமுத்து:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், பவானிசாகர் அணைக்கட்டு பகுதியைச் சுற்றுலா மையமாக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

பெரியார் மாவட்டம் பவானிசாகர் அணைக்கட்டுப் பகுதியை சுற்றுலா மையமாக்க உரிய கருத்துரு எதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வெ.அ. ஆண்டமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் டாம் கட்டிய காலத்திலிருந்தே அது கவனிக்கப்படாமல் இருக்கிறது. அங்கு மிக அழகான பூங்கா ஒன்று இருக்கிறது. விடுமுறை நாட்களில் அதிகமான மக்கள் வருகிறார்கள். மாதம் ஒன்றுக்கு 50,000 மக்களுக்கு மேல் வந்து அந்தப் பூங்காவை பார்வையிடுகிறார்கள். அதைச் சுற்றுலாப் பகுதியாக மாற்றினால் அரசுக்கு நல்ல வருமானம் கிடைக்கும். கோவை, பெரியார் மாவட்டங்களில் அதைப்போல ஒரு சுற்றுலாப் பகுதியே கிடையாது. ஆகையால் அதைச் சுற்றுலாப் பகுதியாக ஆக்குவதற்கும், பரிசீலனையில் எடுத்துக் கொள்வதற்கும் அரசிடம் குறிப்புகள் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.